[திரு. அர. சக்கரபாணி] [2022 ஜனவரி 6

மாவட்டத்திலும் எப்படி நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்பது குறித்த ஓர் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர், வேளாண் இணை இயக்குநர், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்), நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் SRM அல்லது RM மற்றும் 2 விவசாயப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு எந்தெந்த இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும் என்று முடிவு செய்யும். மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி, எந்தெந்தப் பகுதிகளிலே நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்களோ, அங்கே உடனடியாகத் திறக்கப்படும். சம்பா சாகுபடி அறுவடை செய்கின்ற இந்த நேரத்திலே ராணிப்பேட்டை மாவட்டம் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் எந்தெந்த இடங்களிலே நெல் கொள்முதல் நிலையங்கள் தேவையோ, அந்தந்த இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து, நெல் கொள்முதல் செய்வதற்கான உத்தரவை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வழங்குவார்கள்.

முற்பகல் 11–10

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஆ) காஞ்சிபுரம் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2022 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாநகராட்சிச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(இ) சிவகாசி மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022 ஆம் ஆண்டு சிவகாசி மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2022 ஆம் ஆண்டு சிவகாசி மாநகராட்சிச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*